### ஓவியர் டிராட்ஸ்கி மருதுவுக்கு – கனடாவின் தமிழ் இலக்கியத் தோட்ட விருது!

# தமிழர் வரலாற்றுக்குப் பெரும் பங்காற்றிய - ஓவியர் டிராட்ஸ்கி மருதுவின் வாழ்நாள் சாதனைகளுக்கு தக்க அங்கீகாரம்!

## வலைதளத்தில் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

சென்னை, ஜூலை 30-

புகழ்பெற்ற ஓவியர் டிராட்ஸ்கி மருது அவர்களுக்கு, கனடாவில் இயங்கி வரும் தமிழ் இலக்கியத் தோட்டத்தின் ‘அ.முத்துலிங்கம் இயல் விருது’ அறிவிக்கப் பட்டுள்ளது.

இச்செய்தியறிந்து உவகையுற்ற கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், டிராட்ஸ்கி மருது அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்து வலைதளத்தில், வெளியிட்ட செய்தியில் “தமிழர் வரலாற்றுக்குப் பெரும் பங்காற்றிய ஓவியர் டிராட்ஸ்கி மருது அவர்களின் வாழ்நாள் சாதனைகளுக்கான தக்க அங்கீகாரம் இவ்விருது” என்று குறிப்பிட்டுள்ளார்.



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

**“கனடாவில் இயங்கி வரும் தமிழ் இலக்கியத் தோட்டத்தின் 2025-ஆம் ஆண்டிற்கான ‘அ. முத்துலிங்கம் இயல் விருது’ ஓவியர் டிராட்ஸ்கி மருது அவர்களுக்கு அறிவிக்கப்பட்டிருப்பதற்கு எனது நெஞ்சார்ந்த பாராட்டுகள்.**

**‘நேர்த்தியான கோட்டோவியர்’ என்பதோடு ‘அனிமேஷன்’ எனப்படும் இயங்குபடக் கலை, கணினி வரைகலை ஆகியவற்றிலும் தொடர்ந்து இயங்கி வந்த அவரது ஆற்றலைப் பயன்படுத்திக் கொள்ளும் விதத்தில் தமிழ்நாடு அரசு திரைப்பட மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத் தலைவராக நமது ‘திராவிட மாடல்’ அரசில் அவரை நியமித்தோம். 2023ஆம் ஆண்டு நமது அரசின் செய்தித்துறை வெளியிட்ட இலக்கிய மலரிலும் டிராட்ஸ்கி மருது அவர்கள் பங்களித்திருந்தார்.**

**தமிழ் மன்னர்கள் உண்மையில் எப்படி இருந்திருப்பார்கள் என்பதை வெளிப்படுத்தும் ஆர்வத்துடனும், அதுவரை இருந்து வந்த தவறான மனச்சித்திரங்களைக் கலைத்துப் போடும் வகையிலும் அவர் கொண்டு வந்த ‘வாளோர் ஆடும் அமலை’ போன்ற பங்களிப்புகளால் தமிழர் வரலாற்றுக்கும் அவர் பெரும் பங்காற்றியுள்ளார்.**

**தமிழ் மரபை உலகின் நவீனச் சிந்தனைப் போக்குகளோடு இணைக்கின்ற பாலமாக விளங்கி வரும் ஓவியர் டிராட்ஸ்கி மருது அவர்களின் வாழ்நாள் சாதனைகளுக்கான தக்க அங்கீகாரமாக இவ்விருது அமைவதில் மகிழ்ச்சி கொள்கிறேன்.**

இவ்வாறு அந்த வாழ்த்துச் செய்தியில் கழகத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### ‘வாட்ஸ் அப்’பில் வலம் வருவது!

## விஜய் முதலீடா?




### உள்ளாட்சித் தேர்தல்களில்

# தி.மு.கழகம் நிச்சயம் மாபெரும் வெற்றி பெறும்!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி உறுதி!

**சென்னை, ஜூலை 30 -**

**தி.மு.க. சட்டத்துறை சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளையொட்டி வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தும், மக்கள் விரோத தவெக அரசை கண்டித்தும் மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம் புது வண்ணாரப்பேட்டை ஏ.இ.கோவில் தெருவில் நடைபெற்றது,**



சட்டத்துறை துணை செயலாளர் என்.மருது கணேஷ் தலைமையில், சென்னை வடக்கு மாவட்ட செயலாளர் ஆர்.டி.சேகர் முன்னிலை வகித்தார்.

இந்தக் கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

அப்போது அவர் பேசியதாவது .

நடைபெற்று முடிந்த சட்ட மன்றத் தேர்தலுக்குப் பிறகு முதன்முறையாக ஆர்.கே.நகரில் நடைபெறுகிற இந்த கூட்டத்தை பார்த்தால் நாம் எதிர்க் கட்சியா அல்லது ஆளுங்கட்சியா என்பதை யோசிக்க வைக்கிறது, அந்த அளவுக்கு கூட்டம் கூடிள்ளது,

திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுங்கட்சியாக இருந்தாலும் எதிர்க் கட்சியாக இருந்தாலும் மக்கள் பிரச்சனைக்கு முக்கியத்துவம் தருவது தி.மு.க. தான், நேற்று பெய்த மழையில் இன்று முளைத்த காளான்கள் எல்லாம் தி.மு.க.வை அழிப்பேன் என்று கூறுவது வேடிக்கையாக இருக்கிறது.

தி.மு.க.வை அழிக்க நினைத்தவர்கள் வாழ்ந்ததாக சரித்திரம் இல்லை, இது கடந்த கால வரலாறு. தி.மு.க.வை மூட்டைப்பூச்சி போல் நசுக்கி விடுவேன் என்று கூறிய ராஜாஜிக்கு மணிமண்டபம் கட்டியது தி.மு.க. தான், அதுமட்டுமல்ல கடந்த கால தி.மு.க.வின் 75 ஆண்டு கால வரலாற்றில் தி.மு.க.வை அழிக்க நினைத்தவர்கள் எல்லாம் காணாமல் போய்விட்டார்கள்.

கடந்த ஐந்தாண்டு கால திராவிட முன்னேற்றக் கழக திராவிட மாடல் ஆட்சியில் வடசென்னை வளர்ச்சிக்காக முன்னாள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பல்வேறு திட்டங்களை கொண்டுவந்து செயல்படுத்தி உள்ளார். இந்த ஆர்.கே.நகர் தொகுதி எந்த அளவுக்கு வளர்ச்சி பெற்று உள்ளது என்பதை மக்களாகிய நீங்கள் உணர்வீர்கள்,

### ஜோதிடத்தை நம்பி புதிய இடம்!

ஆனால் புதிதாக ஆட்சிக்கு வந்தவர்கள் தேர்தலின் போது சொன்ன வாக்குறுதிகள் எதையும் இதுவரை நிறைவேற்றவில்லை, அதற்கு மாறாக தி.மு.க. கொண்டு வந்த திட்டங்களின் பெயரை மாற்றும் வேலையைத்தான் செய்கிறார்கள். தற்போதுள்ள முதலமைச்சர் வாஸ்துபடி முதலமைச்சர்கள் அலுவலகத்தை நாமக்கல் கவிஞர் மாளிகைக்கு மாற்றப் போவதாக செய்திகளை பார்த்தேன். பேரறிஞர் அண்ணா அமர்ந்த இடத்தை, கலைஞர் இருந்த இடத்தை , முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் இருந்த இடத்தை மாற்றி ஜோதிடத்தை நம்பி புதிய இடத்திற்கு போவது என்பது மிகவும் வேடிக்கையான ஒன்று.

தமிழ்நாட்டையே சோகத்தில் ஆழ்த்திய கரூரில் 41 பேர் உயிரிழந்த சம்பவத்தை அறிந்த தி.மு.க. அரசும், அப்போதைய முதல்வர் மு க ஸ்டாலினும் இரவோடு இரவாக ஓடோடி சென்று இறந்தவரின் குடும்பத்தினர்களுக்கு ஆறுதல் கூறி இறந்தவரின் குடும்பத்திற்கு தலா 10 லட்ச ரூபாய் வழங்கினார். ஆனால் விஜய்ம் அவர்களை கண்டு கொள்ளாமல் வேக வேகமாக சென்னைக்கு ஓடி வந்தார், ஆறு மாதத்திற்கு பிறகு திடீர் ஞானோதயம் பிறந்து கரூருக்கு சென்று அழுது நாடகம் ஆடுகிறார்கள், இவர்களது நாடகத்தை எல்லாம் தமிழ்நாட்டு மக்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

திராவிட மாடல் அரசு எத்தனை தடைகள் வந்தாலும் அதையெல்லாம் உடைத்தெறிந்து மக்களுக்கு நன்மை செய்வதில் முதன்மையான அரசு என்பதை எடுத்துக்காட்ட ஒரே ஒரு உதாரணம் சொல்கிறேன்.

தி.மு.க. அரசு செயல்படுத்தி வந்த கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தின் கீழ் மகளிர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டத்தை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வந்தது, கடந்த தேர்தலுக்கு முன்பு இதனை முடக்கும் விதமாக பி.ஜே.பி. வழக்கறிஞர் உச்சநீதிமன்றத்தில் தேர்தல் நடைபெற உள்ளதால் இந்த திட்டத்தை நிறுத்த வேண்டும் என்று வழக்கு தொடர்ந்தனர்.

### ஆறு மணிக்கு மேல் ஆட்டோ ஓடாது!

இது குறித்து தகவல் அறிந்த மு.க.ஸ்டாலின் இரவோடு இரவாக தலைமைச் செயலர், நிதித்துறை செயலாளர் ஆகியோரை அழைத்து ஆலோசனை செய்து, உடனடியாக பொழுது விடிவதற்குள் மார்ச், ஏப்ரல், மே, மூன்று மாதங்களுக்கான மகளிர் உரிமைத் தொகை 3000 ரூபாயும் ஊக்கத் தொகையாக 2000 ரூபாயும் சேர்த்து தமிழகம் முழுவதும் ஒரு கோடியே 31 லட்சம் மகளிர்களுக்கு 5000 ரூபாய் வங்கியில் வரவு வைத்தார். உடனடியாக நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் அந்தத் திட்டத்தை முடக்கி இருப்பார்கள். ஆனால் இப்போதைய முதல்வரோ ஆறு மணிக்கு மேல் எந்த அதிகாரியும் பார்ப்பதில்லை, மக்கள் பணி செய்வதற்கு கால நேரம் பார்க்காமல் செயல்பட்ட அரசு தி.மு.க. அரசு, ஆனால் தற்பொழுது வடிவேலு பட காமெடி போல் ஆறு மணிக்கு மேல் ஆட்டோ ஓடாது என்ற நிலை உள்ளது.

தற்போதைய முதல்வர் விஜய் பதவிக்கு ஆபத்து வரும் எனில் அது அமைச்சர் ஆதவ் அர்ஜூனாவால் தான் வர நேரிடும், ஆதாவ் அர்ஜூனா ஏற்கனவே தி.மு.க.வில் சில காலம் ஒட்டிக் கொண்டிருந்தார், பின்னர் திருமாவளவன் கட்சிக்கு சென்று எம்பி ஆகிவிடலாம் என்று பார்த்தார், அதுவும் கிடைக்காதால் அங்கிருந்து தவெகவிற்கு சென்று உள்ளார், அடுத்து அவர் புதிதாக இயக்கம் தொடங்கியுள்ள அண்ணாமலை இயக்கத்திற்கு கூட செல்ல தயங்க மாட்டார்.

### உதயநிதி ஸ்டாலின் செயல்பாடு பாராட்டுக்குரியது!

இன்றைக்கு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராக உள்ள உதயநிதி ஸ்டாலின் அவர்களின் செயல்பாடுகள் மிகவும் பாராட்டும் விதத்தில் அமைந்து வருகிறது.

ஆளும்கட்சியாக பொறுப்பேற்றதும் மக்களுக்கான பணிகளை செய்ய சட்டமன்றத்தை பயன்படுத்துவார்கள் என்று பார்த்தால்,

சட்டமன்றத்தில் அப்பாவை காணவில்லை என்று விஜய் நையாண்டி செய்கிறார். அதற்கு நமது உதயநிதி ஸ்டாலின் தக்க பதிலடி கொடுத்தார், அப்பாவை காணவில்லை, கணவரை காணவில்லை என்று செங்கல்பட்டு கோர்ட்டில் தேடிக் கொண்டிருக்கிறார்கள் என்று பதிலடி கொடுத்தார், அதைத் தொடர்ந்து விஜய் அந்த பேச்சை அத்தோடு நிறுத்திவிட்டார்.

அது மட்டுமல்ல தற்பொழுது ஒரு அமைச்சர் நமது உதயநிதியை பார்த்து விமர்சனம் செய்கிறார், நான் அவர்களுக்கு எச்சரிக்கையாக ஒன்று சொல்கிறேன், உதயநிதியிடம் மட்டும் வாலாட்டாதீர்கள், ஏனென்றால் கலைஞர் ஜாதகமும் உதயநிதி ஜாதகமும் ஒரே ஒன்றுதான். ஒற்றைச் செங்கல்லை காட்டியே வரலாற்று வெற்றியை பெற்றவர் உதயநிதி, சட்டமன்றத்தில் எதிர்க் கட்சி தலைவருக்கான பணியை சிறப்பாக செய்வார், இந்த ஆட்சியில் நடைபெற்று வரும் மக்கள் விரோத நடவடிக்கைகளை வரும் சட்டமன்றக் கூட்டத்தொடரில் ஆணித்தரமாக எடுத்துரைப்பார்.

அடுத்த மாதம் கூட உள்ள பட்ஜெட் கூட்டத்தொடரில் இது எதிரொலிக்கும். வரும் ஐந்தாம் தேதி பட்ஜெட் போட உள்ளார்கள், அதில் எண்ணத்தை செய்யப் போகிறார்கள் என்று பொறுத்திருந்து பார்ப்போம், அதிலும் இந்த பட்ஜெட்டை தாக்கல் செய்யப் போவது இந்த தொகுதியைச் சேர்ந்த எம்.எல்.ஏ. மரிய வில்சன் தான், அவருக்கு ஏற்கனவே தமிழ் தகராறு, அவர் பேசுவது அவர் கட்சியின் எம்.எல்.ஏ.க்களுக்கே புரியாது.

### அமைச்சர்களின் அழுகை ஆக்டிங்!

நீட் தேர்வு ரத்து செய்யக்கோரி டெல்லியில் மாணவர்கள் போராட்டம் நடத்தி வரும் வேளையில் இங்கு உள்ள அமைச்சர்கள் ஜனநாயகன் படத்தை பார்த்துவிட்டு அழுகிறார்கள், ஒரு அமைச்சர் அழுவதை பார்த்து அடுத்தடுத்து இருப்பவர்களும் அதே போல் அழுது ஆக்டிங் செய்தார்கள். இருந்த போதும் அந்தப் படம் ஓடவில்லை, மொத்தத்தில் விஜய் மார்க்கெட் இல்லாத நடிகர்கள் பட்டியலில் சேர்ந்து விட்டார்.

இன்றைக்கு நடைபெறுகின்ற ஆட்சியை பார்க்கும் பொழுது ஒரு சினிமா பட காமெடி தான் எனக்கு நினைவு வருகிறது, ஒரு படத்தில் செந்தில் பொண்ணு பார்க்க செல்வார், அப்போது உடன் இருக்கும் ரஜினி இடம் நான் பார்க்க அசிங்கமாக இருக்கிறேன். எனக்கு உனது டிரஸ்ஸை கொடு, எனக் கேட்பார், ரஜினியும் தனது டிரசை செந்திலுக்கு கொடுப்பார், அதை போட்டுக் கொண்டு பின், பார்ப்பவரிடமெல்லாம் ரஜினி, மாப்பிள்ளை இவர்தான் இவர் போட்டிருக்கும் டிரஸ் என்னுடையது என்பார், அது போல்தான் தற்பொழுது செந்திலைப் போன்று விஜய் அரசும், ரஜினியைப் போன்று நாமும் இருக்கிறோம்.

தி.மு.க. காரன் தான் மக்களை மதித்து பணியாற்றக் கூடியவன், தி.மு.க. ஆட்சியின் போது தமிழ்நாடு முழுவதும் அடிப்படை பணிகளை நிறைவேற்ற பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட இருந்தது. தற்பொழுது அனைத்து காண்ட்ராக்ட்களையும் கேன்சல் செய்து விட்டார்கள். சாலை சேதம் அடைந்துள்ளது, மழைக்காலம் வர உள்ளது, மழை பெய்தால் சாலை சேதம் அடையக் கூடும், அதனை சரி செய்யக் கூட இந்த அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மொத்தத்தில் விஜய் அரசு தேர்தலின் போது கொடுத்த வாக்குறுதிகள் எதையும் இதுவரைக்கும் நிறைவேற்றாமல் ஏமாற்றித்தான் வருகிறார்கள்.

இந்த அரசு ஆட்சிக்கு வருவதற்கு முன்பு லஞ்சம், ஊழல், எதுவும் இருக்காது என்று உறுதி கூறினார்கள். ஆனால் ஆட்சிக்கு வந்தவுடன் பழனி தண்டாயுதபாணி கோவிலுக்கு சொந்தமான ரூ.100 கோடி மதிப்புள்ள நிலத்தை 2 கோடிக்கு பதிவு செய்து உள்ளார்கள். அதேபோல் அரசு வழக்கறிஞர்கள் நியமிப்பதிலும் 15 லட்ச ரூபாய் கொடுத்தால் அரசு வழக்கறிஞர் பதவி என்று கூறுகிறார்கள். இதற்கெல்லாம் ஊழல் என்று பெயர் சொல்லாமல் என்ன சொல்வது.

### த.வெ.க.வின் அலங்கோல ஆட்சி!

தமிழக வெற்றிக் கழகம் ஆட்சிக்கு வந்ததும் அவருடைய நிர்வாகிகள் அடிக்கிற லூட்டிகள் தான் தற்போது இணையதளத்தில் வேகமாகப் பரவி வருகிறது. கட்சி நிர்வாகிகள் கலெக்டர் அமர்கின்ற இருக்கையில் அமர்ந்து கொண்டு பேசுகிறார்கள், நகராட்சி ஆணையர் இருக்கையில் அமர்கிறார்கள், அதேபோல் மருத்துவமனைக்குச் சென்று செவிலியர்களிடம் அவர்கள் கொடுக்கும் சிகிச்சை குறித்து கேட்கிறார்கள், ஒரு எம்.எல்.ஏ. ரேஷன் அரிசி ஏற்றி செல்லும் லாரியை மடக்கி, அந்த அரிசி தரமாக உள்ளதா என்பதை பார்க்காமல் டயர் சரியில்லை, வீல் சரியில்லை, என்று கூறுகிறார் ஆர்.டி.ஓ. பார்க்க வேண்டிய வேலையை ஒரு எம்எல்ஏ பார்க்கிறார், இப்படி ஒவ்வொரு எம்.எல்.ஏ.வும் ஒவ்வொரு ரகமாக உள்ளார்கள். த.வெ.க. மாவட்ட செயலாளர் ஒரு பெண்ணிடம் தவறாக நடந்துள்ளதாக அவர் மீது புகார் காவல் நிலையத்திற்கு கொடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு காவல் நிலையத்திலும் லாக்கப் டெத் தற்போது நடைபெறுகிறது. இதற்கெல்லாம் முதலமைச்சர் விஜய் வாய் திறந்து பதில் சொல்லுவதில்லை.

சென்னையில் மெட்ரோ ரயில் திட்டத்தை கொண்டு வந்து சிறப்பாக தி.மு.க. அரசு செயல்படுத்தியது. வண்ணாரப்பேட்டை வரை இருந்த மெட்ரோ ரயில் நிலையத்தை விம்கோ நகர் வரை விரிவு படுத்தியது தி.மு.க. அரசு தான். அதேபோல் மதுரை, கோயம்புத்தூர், பகுதியில் மெட்ரோ ரயில் வேண்டும் என்று நாம் முயற்சி எடுத்தோம், ஆனால் தற்போது ஒன்றிய அரசு அதற்கு அனுமதி மறுத்துள்ளது. இதைப் பற்றி முதலமைச்சர் விஜய் அல்லது அவர்களது அமைச்சர்கள் யாரும் இதுவரை வாய்த்திறக்கவில்லை.

தி.மு.கழகத்தை போல் வெற்றி பெற்ற இயக்கமும் கிடையாது தோல்வியடைந்த இயக்கமும் கிடையாது.

1984 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலின் போது நாம் வெற்றி பெறவில்லை, அப்போது அ.தி.மு.க. வெற்றி பெற்றது. அதைத்தொடர்ந்து நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் 102 இடங்களில் அ.தி.மு.க. பதினோரு இடம் மட்டும் தான் வென்றது மீதி 90 க்கும் மேற்பட்ட இடங்ளில் தி.மு.க. வெற்றி பெற்றது, அதேபோல்தான் தற்பொழுதும் நடந்து முடிந்த தேர்தலில் தி.மு.க. வெற்றி வாய்ப்பு இழந்திருந்தாலும் இன்னும் ஆறு மாதங்களில் உள்ளாட்சித் தேர்தல் வரப்போகிறது, நிச்சயம் வெற்றி பெறுவோம், ஏனென்றால் தற்பொழுது நடைபெற்று வரும் ஆட்சியின் அலங்கோலங்களை மக்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள், தேர்தலின் போது சொன்ன வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றவில்லை என்ற எண்ணம் மக்கள் மனதில் உள்ளது. நமது ஆட்சியின் சாதனைகளை மக்கள் இன்னும் மறக்காமல் தான் உள்ளனர், இவையெல்லாம் வருகின்ற உள்ளாட்சித் தேர்தலில் நமக்கு வெற்றியை பெற்றுத் தரும்.

தி.மு.க. தோற்று இருந்தாலும், எதிர்க்கட்சியாக உள்ள தற்பொழுது அறிவாலயத்தில் தொண்டர்கள் கூட்டம் அலைமோதுகிறது.

கழகத் தலைவரைப் பார்க்க ஆவலுடன் வருகிறார்கள், தி.மு.க. காரன் ஒவ்வொருத் தரும் தற்பொழுது தோல்வியெல்லாம் மறந்துவிட்டு எழுச்சியோடு இருக்கிறார்கள்.

இவ்வாறு அவர் பேசினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர், துணை அமைப்பு செயலாளர் தாயகம் கவி, தலைமைக் கழக பேச்சாளர் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜே.ஜே.எபினேசர், பகுதி செயலாளர்கள், இரா.இலட்சுமணன், எஸ்.ஜெபதாஸ் பாண்டியன், அ.முருகன் இரா.செந்தில்குமார், மாநில நிர்வாகிகள் டாக்டர் ஜி. சந்திர போஸ், வீ,கவி கணேசன், மீஞ்சூர் கே.சுரேஷ், இரா. மதிவாணன், இரா.நரேந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் த.இளையஅருணா, இரா.கர்ணா, மாவட்ட நிர்வாகிகள் இரா.வெற்றி வீரன், க.நாகம்மை, வீ.தயாளன், பொதுக்குழு உறுப்பினர்கள் வே.சிவக்குமார், கி.ராஜேந்திரன், த.கமலக்கண்ணன், சு.சேகர், ஏ தமிழ்ச்செல்வன், வெ.சு.சத்யநாராயணன், ஆர்.பொன்இளவரசன், வை.கௌதமன், இ.ரவிக்குமார், ஏ.டி.மணி, வி.வி.ரமேஷ், எஸ்.எம்.பரசுராமன், எம்.விமலா, ஒலி ஒளி பாபு, கார்த்திக் செங்குட்டுவன், கோ.சதீஷ், பகுதி நிர்வாகிகள் என்.அனிபா, ஆர்.டி.ராஜா, கே.பாலு, எம்.வேத லட்சுமி, கே.பி.சதீஷ்குமார், மாஸ் டி.வெங்கடேசன், எம்.கோவிந்தராஜ், எம் லோகநாதன், டி.திராவிட செல்வி,பி. சீனிவாசன், வட்ட செயலாளர்கள் என்.எம் .திரேசன், தா.மு கஜேந்திரன், பா.குமார், ச.தமிழ்ச்செல்வன், போ.து. ராஜா, எஸ்.எல்.சுந்தர், நேதாஜி யு கணேசன் ,, கே தேவன், எம் சசிகுமார், ஜி ஏழுமலை, ஆர் ராஜன், இரா பாலன், க.கலைச்செல்வன், பெரம்பூர் முருகன், மாவட்ட பிரதிநிதிகள் நெல்லை எம்.எம். சாமி, வி.முத்து, பி.அன்பழகன், ஜே.சுரேஷ், பாபு, ஆர் ரமேஷ், கே.மோகன், ஜி ராஜா, மீஞ்சூர் முகுந்தன், பா.சண்முகம், எஸ்.கே. இளங்கோ, வானூர் ராஜி வி.ஞானசேகர் வழக்கறிஞர்கள் த.சிவராம் கே. பொம்முராஜ் எஸ்.எம்.டி. ரவிச்சந்திரன், எஸ். சரவணகுமார் எஸ்.தனசேகரன், ஜே. காணிக்கைநாதன் மா.ருபசங்கர், கோ ஹரிராமன், கே. பழனியப்பன், எம்டி மதன்ராஜ் சி. சேனாபதி ஆர் ராஜன், சி.பாலமுருகன் வி. கார்த்திக், சி ஸ்ரீதர், ஜி கணேஷ், மற்றும் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதி நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள் நிர்வாகிகள், அணிகளின் பகுதி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், கழக வழக்கறிஞர்கள் கழகத் தோழர்கள் தோழியர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் Genz இளந்தலைமுறையினர் மற்றும் பொதுமக்கள் பெருமளவில் கலந்து கொண்டனர்.

முன்னதாக தி.மு.க.வின் ஜென்சி இளைஞர்கள் தி.மு.க. அரசின் சாதனைகளை நாடகமாக நடித்துக்காட்டி விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

கூட்ட நிறைவில் வட்ட செயலாளர்கள் நா.கோதண்டன், மா.நாகராஜன் நன்றி கூறினார்கள்.